**DEPOSITION OF WITNESS**
**IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE.**
**TIRUVANNAMALAI.**

**S.C. No.76/2015**

**PW17**

| | | |
|---|---|---|
| **Name** | : | M. ராஜகோபால் |
| **Father's Name** | : | K. முனுசாமி |
| **Village** | : | |
| **Taluk/District** | : | |
| **Caste** | : | |
| **Calling** | : | |
| **Religion** | : | |
| **Age** | : | |

Solemnly affirmed in accordance with the provision of Act X of 1873 of the day of 21.11.2025.
Accused present.

**முதல் விசாரணை**

நான் தற்போது காஞ்சிபுரம் மாவட்டத்தில் காவல் துணை கண்காணிப்பாளராக பணியிடை பயிற்சி மையத்தில் பணிபுரிந்து பணிநிறைவு பெற்றுவிட்டேன். கடந்த 2013 ஆம் ஆண்டில் திருவண்ணாமலை மாவட்டத்தில் மேல்செங்கம் காவல் நிலையத்தில் வட்ட காவல் ஆய்வாளராக பணிபுரிந்தேன். 01.09.2013 அன்று இரவு 23.00 மணிக்கு சிறப்பு உதவி ஆய்வாளர் குமரேசன் என்பவர் பதிவு செய்த மேல்செங்கம் காவல் நிலைய குற்ற எண். 142/2013 பிரிவு 294(பி),324,506 இதசப்படி என்ற வழக்கில் சம்மந்தப்பட்ட சக்திவேல் என்பவர் இறந்துவிட்டதாக 02.09.2013 அன்று அதிகாலை 5.20 மணிக்கு தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் இருந்து பெற்ற தகவலின் பேரில் பிரிவு 294(பி),324,506 இதசவில் இருந்து பிரிவு 302 இதசப்படி பிரிவு மாற்றம் செய்து நீதிமன்றத்திற்கு பிரிவு மாற்ற அறிக்கையை அனுப்பி வைத்தேன்.

அந்த பிரிவு மாற்றல் அறிக்கை அ.சா.ஆ.11. அதே தினத்தில் காலை 9.00 மணிக்கு சம்பவ இடமான நீப்பத்துறை கிராமத்தில் ஸ்ரீபிரசன்ன வெங்கட ரமண பெருமாள் கோவில் மண்டபத்தில் உள்ள பானுமதி என்பவரின் கடைக்கு ஒட்டிய ரோட்டில் சாட்சிகள் வஜ்ஜிரவேல், வடிவேல் ஆகியோர் முன்னிலையில் ஒரு மாதிரி வரைபடம் மற்றும் பார்வை மகசர் தயார் செய்தேன். அந்த மாதிரி வரைபடம் அ.சா.ஆ.12. அன்றே சாட்சிகள் வஜ்ஜிரவேல், வடிவேல் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 02.09.2013 அன்று காலை 11.00 மணிக்கு தருமபுரி அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனைக்கு சென்று இறந்த சக்திவேல் என்பவரின் பிரேதத்தின் மீது பஞ்சாயத்தார்கள் மற்றும் சாட்சிகள் முன்னிலையில் விசாரித்து பிரேத

விசாரணை அறிக்கை தயார் செய்தேன். அந்த பிரேத விசாரணை அறிக்கை அ.சா.ஆ.13.

அன்றே பிரேதத்தின் மீது பிரேத பரிசோதனை செய்ய 13.15 மணிக்கு காவலர் தங்கதுரை என்பவர் மூலம் வேண்டுகோள் கடிதம் கொடுத்தேன். பிரேத பரிசோதனை முடிந்த பிறகு பிரேதத்தின் மீது இருந்த 4 முழம் வேட்டியை என்னிடம் காவலர் தங்கதுரை தனியறிக்கையுடன் ஆஜர் படுத்தினார். பிரேத பரிசோதனையின் போது சேகரிக்கப்பட்ட உடல் உள்ளுறுப்புகளை ஒப்படைத்தார். 4 முழம் வேட்டியை நான் படிவம் 95 ல் நீதிமன்றத்திற்கு அனுப்பிவைத்தேன். தற்போது நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் 4 முழம் வேட்டிதான் அது. அது **அ.த.சா.பொ.1**. உடல் உள்ளுறுப்புகளை நீதிமன்றம் மூலம் வேலூர் வட்டார தடய அறிவியல் ஆய்வகத்திற்கு ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பிவைத்தேன். சாட்சிகள் ஜெகதீசன், குமார், பஞ்சாச்சரம், ஏழுமலை, அன்புதுரை, மீனாட்சி, பானுமதி, பழனிவேல், சிவப்பிரகாசம் ஆகியோரை விசாரரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன்.

03.09.2013 அன்று இவ்வழக்கின் எதிரியை தேடி வந்ததில் தகவலின் பேரில் செங்கம் – நீப்பத்துறை செல்லும் வனப்பகுதியில் அத்திப்பாடி கூட்ரோட்டிடம் நின்றுக்கொண்டிருந்த எதிரியை காரணம் கூறி கைது செய்து சாட்சிகள் ஆறுமுகம், மாதேஸ்வரன் ஆகியோர் முன்னிலையில் எதிரி தானாக முன்வந்து கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தை பதிவு செய்தேன். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் தன்னை அழைத்து சென்றால் சக்திவேலை தாக்க பயன்படுத்திய 2 செங்கலை நீப்பத்துறை கிராமத்தில் உள்ள ஸ்ரீபிரசன்ன வெங்கட ரமண பெருமாள் கோவில் பின்புறம் உள்ள தென்பண்ணை ஆற்றங்கரை முட்புதரில் வைத்திருப்பதாகவும் தன்னை அழைத்து சென்றால் அதை எடுத்து ஆஜர் படுத்துவதாகவும் கூறினார். அந்த ஒப்புதல் வாக்குமூலத்தில் அனுமதிக்கப்பட்ட பகுதி **அ.த.சா.ஆ.14**.

சாட்சிகள் ஆறுமுகம், மாதேஸ்வரன் முன்னிலையில் பதிவு செய்தேன். அதன் படி காலை 8.00 மணிக்கு நீப்பத்துறை கிராமத்தில் உள்ள ஸ்ரீபிரசன்ன வெங்கட ரமண பெருமாள் கோவில் பின்புறம் உள்ள தென்பண்ணை ஆற்றங்கரை அதே சாட்சிகளுடன் வந்தேன். எதிரி மறைத்து வைத்திருந்த செங்கலை எடுத்து என்னிடம் ஆஜர் படுத்தினார். அதை நான் கைப்பற்றுதல் மகஜரில் அதே சாட்சிகள் முன்னிலையில் கைப்பற்றினேன். அந்த கைப்பற்றுதல் மகஜர் **அ.த.சா.ஆ.15**. நீதிமன்றத்தில் காண்பிக்கப்படும் செங்கல்தான் அவை. அவை **அ.சா.பொ.2 வரிசை** (2 எண்ணிக்கை). எதிரி மற்றும் வழக்குசொத்துக்களுடன் நிலையம் வந்து எதிரியை நீதிமன்ற காவலுக்கு அனுப்பி வைத்தேன்.

சாட்சிகள் ஆறுமுகம், மாதேஸ்வரன் , செல்வராஜ் ஆகியோரை விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். அன்றே மரு.கார்த்திகேயன் , மரு.செல்வமுத்துகுமரன் , மரு.கிருஷ்ணகுமார் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 04.09.2013 அன்று சாட்சிகள் ஏழுமலை, சக்திவேல், ராதா, சத்யா, நடராஜன் என்கிற சக்கரவர்த்தி, கலைமகள், மரு.ரமேஷ் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 06.09.2013 அன்று சாட்சிகள், முரளி, ஆறுமுகம்

ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். முதல் நிலை காவலர் தங்கதுரை, சிறப்பு உதவி ஆய்வாளர் குமரேசன், குணசேகரன் ஆகியோரை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். நீதித்துறை நடுவர் மூலம் வழக்குசொத்துக்களை ரசாயன பகுப்பாய்வுக்கு அனுப்பினேன். 24.01.2014 அன்று பணி மாறுதல் காரணமாக வழக்கு கோப்பை காவல் நிலையத்தில் ஒப்படைத்தேன். எனது விசாரணையில் சாட்சிகள் ராதா, சக்திவேல், மாதேஸ்வரன், சத்யா, ஏழுமலை ஆகியோர் 161 குவிமுச வாக்குமூலத்தில் கண்டுள்ளாவாறு சொல்லியுள்ளார்கள்.

**<u>எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை</u>**

நான் மேல்செங்கம் காவல் நிலைய ஆய்வாளராக 12.12.2012 அன்று சேர்ந்தேன். இறந்துபோன சக்திவேலின் இறப்பு தகவல் 02.09.2013 அன்று அதிகாலை 5.20 மணிக்கு காவலர் குணசேகர் என்பவர் மூலம் பெற்றேன். வழக்கை என் புலன் விசாரணைக்கு அன்று காலை 7.00 மணிக்கு எடுத்துகொண்டேன். முதல் தகவல் அறிக்கை 01.09.2013 இரவு 23.00 மணிக்கு பதிவு செய்யப்பட்டுள்ளது. நான் அந்த புகார் மற்றும் முதல் தகவல் அறிக்கையை பார்த்தேன். புகார் மனுவை தருமபுரி அரசு மருத்துவமனையில் தலைமை காவலர் சுப்பிரமணி என்பவர் பதிவு செய்துள்ளார். புகார் மனுவில் கையொப்பம் இல்லை என்று சொன்னால் விறல் பதிப்பு உள்ளது.

முதல் தகவல் அறிக்கை 01.09.2013 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டது. நான் முதல் தகவல் அறிக்கை 01.09.2013 அன்று நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்டதாக சொல்வது பொய் என்றால் சரியல்ல. புகாரில் உள்ள கண்ணுற்ற சாட்சிகள் யார் என்றால் ராதா மற்றும் சக்திவேல் ஆவார். நான் தற்போது புகாரை பார்த்துதான் இதை சொல்கிறேன் என்றால் சரிதான். மேற்படி சாட்சிகளை போலிசார் விசாரிக்கவே இல்லை என்று சொன்னால் சரியல்ல. தருமபுரி மருத்துவமனையில் இருந்து இன்டிமேசன் யார் பெற்றது என்றால் சிறப்பு உதவி ஆய்வாளர் குமரேசன் என்பவர் பெற்றுள்ளார்.

இன்டிமேசன் பெற்ற நேரம் எனக்கு தெரியாது. தலைமை காவலர் சுப்பிரமணி புகார் பதிவு செய்ய யார் அனுப்பினார் என்றால் குமரேசேன் அனுப்பியுள்ளார். புகார் வாக்குமூலம் 9.00 மணிக்கு பதிவு செய்துள்ளார். சக்திவேல் இறந்த இன்டிமேசன் காவலர் குணசீலன் என்பவர் வாங்கியுள்ளார். நான் சம்பவ இடத்திற்கு சென்றேன். சம்பவ இடம் பானுமதி கடைவாசல் என்றால் சரிதான். அது ரோடு என்றால் சரிதான். அந்த சாலை கிழக்கு மேற்கு சாலை. சம்பவம் 30.08.2013 இரவு 9.00 மணிக்கு நடந்தது. கோயில் கடை ஏலம் எடுத்து வசூல் செய்வதுதான் இந்த பிரச்சனை ஏற்பட்டது என்றால் சரிதான். இது சம்மந்தமாக கோயில் நிர்வாகத்தை சேர்ந்தவர்களையோ அல்லது பஞ்சாயத்தை சார்ந்தவர்களையோ சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரிதான். சாட்சி வடிவேலு என்பவரை விசாரணை செய்யவே இல்லை என்றால் சரியல்ல.

பானுமதி கடைக்கு கிழக்கு மற்றும் மேற்கு உள்ளவர்களை சாட்சிகளாக விசாரிக்கவில்லை என்றால் சரியல்ல. 13.08.2013 அன்று சுங்கம் வசூலிப்பது சம்மந்தமாகதான் 30.08.2013 அன்று சம்பவம் நடந்தது என்றால் சரிதான். இந்த வழக்கு சம்மந்தமாக பஞ்சுமிட்டாய் காரனிடம் சாட்சியாக விசாரணை செய்யவில்லை. பிரேத

விசாரணை அறிக்கை தருமபுரி அரசு மருத்துவனையில் தயாரித்தேன். அதற்கு முன் இறந்த நபரின் விபத்து பதிவேடு நகல் கைப்பற்றினேன். அந்த விபத்து பதிவேடு நகலை இவ்வழக்கில் சேர்க்கவில்லை என்றால் சரியல்ல. இறந்துபோன சக்திவேல் தருமபுரிக்கு முன்பாக தீர்த்தமலை ஆரம்ப சுகாதார நிலையத்திலும் அரூர் அரசு மருத்துவமனையிலும் சிகிச்சை பெற்றுள்ளார். எனக்கு அரூர் மருத்துவமனையில் இருந்து எனக்கு எந்த இன்டிமேசனும் வரவில்லை.

எனக்கு தீர்த்தமலை ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து எனக்கு எந்த இன்டிமேசனும் வரவில்லை. தீர்த்தமலை செவிலியர் கலைமகள் என்பவரை விசாரித்தேன்.அவர் 108 ஆம்புலன்சில் நோயாளி வந்ததாக குறிப்பிட்டு சொல்லவில்லை. இறந்த நபர் வயிறு வலிக்கிறது என்று சிகிச்சைக்கு வந்தார் என்று சொன்னதாக செவிலியர் சொன்னார் என்றால் சரிதான். அவர் வெளிநோயாளி பதிவேட்டில் வரிசை எண். 174 ல் மருத்துவமனையின் 26668 ல் பதிவு செய்துள்ளார் என்றால் சரிதான். அநத் ஆரம்ப சுகாதார நிலையத்தில் இருந்து புறநோயாளிகள் சிகிச்சை குறிப்புகளை கைப்பற்றவில்லை என்றால் சரிதான்.

வழக்கறிஞர் கேட்டுக்கொண்டதற்கு இணங்க குறுக்கு விசாரணை வேறு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது.

Taken down by me in Open Court read over of the witness and to acknowledged by him/her as correct.

**Sd/- B.C. Gopinath**
Additional District Judge,
Tiruvannamalai.